# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:-99** **தேதி:07.11.2011**

# கிளர்ந்தெழுவோம்....

அன்பார்ந்த தோழர்களே,

United Forumன் ஒரு அவசரக் கூட்டம், 05.11.2011 அன்று BSNLMS அலுவலகத்தில் United Forumன் தலைவர் தோழர் சுரேஷ் குமார் தலைமையில் நடைபெற்றது. கடந்த கூட்டத்திற்கு பின் ஏற்பட்ட நிகழ்வுகளை அமைப்பாளர் தோழர் VAN நம்பூதிரி தெரிவித்த பின்னர் நடைபெற்ற விரிவான விவாதத்திற்கு பின் கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

### கோரிக்கை பட்டியலும் அதன் மீதான இயக்கங்களும்:-

26.08.2011 அன்று நடைபெற்ற UF கூட்டத்தின் முடிவின் படி ஊழியர்களின் பிரச்சனைகள் தொடர்பாக 28.08.2011 அன்று நிர்வாகத்திற்கு கோரிக்கை பட்டியல் வழங்கப் பட்டது. ஆனால் இவற்றின் மீது நிர்வாகம் ஒரு அக்கறையுடன் கூடிய விவாதத்தை இது நாள் வரை நடத்த வில்லை. பிரச்சனைகள் தேவையற்று காலதாமதப்படுத்த படுகிறது, மறுக்கப்படுகிறது. இதனையெல்லாம் கணக்கிலெடுத்து விவாதம் நடத்திய பின் கீழே தரப்பட்டுள்ள கோரிக்கைகளுக்காக பின் வரும் இயக்கங்களை நடத்துவது என United Forum முடிவெடுத்துள்ளது.

**18.11.2011:-மாவட்ட/மாநில/அகில இந்திய மட்டங்களில் பெருந்திரள் தர்ணா.**

**28,29.11.2011:- மாவட்ட/மாநில/அகில இந்திய மட்டங்களில் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை இரண்டு நாட்கள் தொடர் உண்ணாவிரதம்.**

## *கோரிக்கை பட்டியல்*

**a) நிறுவனம் நஷ்டத்தில் இயங்கினாலும் BSNL ஊழியர்களுக்கு PLI (போனஸ்) வழங்கு.**

**b) ஊழியர் தரப்பு ஏற்கனவே கொடுத்துள்ளதை போன்ற மாற்றத்தை ஊழியர்களின் பதவி உயர்வு கொள்கையில் கொண்டுவர வேண்டும்.**

**c) NE12 ஊதிய விகிதத்தை 01.01.2007 முதல் உடனடியாக அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.**

**d) ஊழியர்களின் பதவிகளுக்கு புதிய பெயர்களை உடனடியாக இறுதிப்படுத்த வேண்டும்.**

e) 10+2 படிக்காத ஊழியர்களுக்கு, TTA தேர்வுகளுக்கான முன் தகுதித் தேர்வை உடனடியாக நடத்த வேண்டும்.

f) டெலிகாம் மெக்கானிக் தேர்வுக்கு எந்த விதமான தகுதியையும் நிர்ணயிக்காமல், அனைத்து RM களையும் தேர்வு எழுத அனுமதிக்க வேண்டும்.

g) எர்ணாகுளம் CAT தீர்ப்பின் அடிப்படையில், சேவையில் இளையவர்களை விட மூத்தவர்கள் குறைவாக ஊதியம் வாங்கும் அனாமலி தீர்க்க வேண்டும்.

h) விடுபட்ட காசுவல் ஊழியர்களை நிரந்தரப்படுத்த வேண்டும்.

i) காசுவல் மஸ்தூர் மற்றும் TSM தோழர்களுக்கு IDA விகிதத்தில் ஊதியம் நிர்ணயம் செய்வதோடு, ESI மற்றும் EPF ஆகியவற்றை அமுல் படுத்த வேண்டும்.

j) 01.10.2000க்கு பின் நிரந்தரப்படுத்தப் பட்ட TSM ஊழியர்களையும், ஊழியர்களுக்கான பதவி உயர்வுக் கொள்கையில் DOTயில் தெரிவு செய்யப்பட்டவராக கணக்கில் கொள்ள வேண்டும்.

k) JTO LICE, TTA LICE, TM LDCE மற்றும் JAO தேர்வுகளை உடனடியாக நடத்த வேண்டும்.

l) கருணை அடிப்படையிலான பணி நியமனம் செய்யும் உயர் அதிகார குழுவில் (HPC) SC/STக்களின் பிரதிநிதிகளை இணைக்க வேண்டும்.

m) கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்காக BSNL நிறுவனம் 27.06.2007ல் வெளியிட்ட வழிகாட்டுதல்களை மறு பரிசீலனை செய்ய வேண்டும்.

n) BSNL ல் உள்ள பெண் ஊழியர்களுக்கு குழந்தைகள் நல விடுப்பை அமுல் படுத்த வேண்டும்.

o) அனைத்து ஊழியர்களுக்கும் GSM மொபைல் கருவிகள் வழங்க வேண்டும்.

எனவே தோழர்களே! மாவட்ட அளவிலான UF கூட்டத்தை கூட்டுவோம். திட்டமிடுவோம். இணைந்த கிளக்கூட்டங்களை கூட்டுவோம். ஊழியர்களை சந்திப்போம். கோரிக்கைகளை விளக்குவோம். இயக்கங்களை வலுவாக நடத்துவோம்.

ஒன்றுபடுவோம்! போரடுவோம்! வெற்றிபெறுவோம்!

.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

S. செல்லப்பா
மாநில செயலாளர்